## சுருக்கம்

பேரிடர் மேலாண்மை – வடகிழக்கு பருவமழை 2023 – 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இருநாட்களில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென்மாவட்ட மக்களுக்கு – வருவாய்த் துறை மற்றும் இதர அரசு துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் வழங்குவதற்கு – சிறப்பு முகாம்கள் நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2**

அரசாணை (நிலை) எண்.02

நாள் 05.01.2024
சோபகிருது வருடம், மார்கழி 20
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.580, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 11.12.2023.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண்.2633, நாள் 30.12.2023.

*****

**ஆணை:-**

தமிழ்நாட்டில் 2023 டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தினங்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாதிக்கப்பட்டன. இதனால் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசால் பல்வேறு மீட்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. அதன் தொடர்ச்சியாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில், பெருமழை மற்றும் பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வருவாய்த் துறை மற்றும் இதர அரசு துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள், குடும்ப அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்ற அரசு ஆவணங்களை இந்த மழை வெள்ளத்தால் இழந்தவர்கள் புதிய ஆவணத்தை

பெறுவதற்கு சிறப்பு முகாம்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் திங்கள் கிழமை தோறும் துவங்கி நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வருவாய்த் துறை மற்றும் இதர அரசு துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள்/ ஆவணங்கள், குடும்ப அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்ற அரசு ஆவணங்களை மழை வெள்ளத்தால் இழந்தவர்களுக்கு, புதிய ஆவணங்களை கட்டணமின்றி வழங்கிட, திங்கள் கிழமை தோறும் வட்ட அளவில் சிறப்பு முகாம்களை நடத்திடுமாறு தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தலாம் எனவும், மேலும், சிறப்பு முகாம்களில், பொதுமக்கள் வசதிக்கென இ-சேவை மையங்கள் செயல்பட ஏற்பாடு செய்திடுமாறு தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை ஆகியோரை அறிவுறுத்தலாம் எனவும் கருதி, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இச்சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கும்போது வழக்கமாக வசூலிக்கப்படும் அனைத்து வகையான கட்டணங்களிலிருந்தும் விலக்களிக்க உரிய நிருவாக உத்தரவுகளைப் (Administrative Instructions) பிறப்பிக்க, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, அரசு முதன்மைச் செயலாளர், உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை துறை, அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வே. ராஜாராமன்
அரசு செயலாளர்

பெறுநர்

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும்
மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம், சென்னை -600005.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு,உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை
தலைமைச் செயலகம், சென்னை – 600009.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல்
சேவைகள் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600009.

(...3...)

அரசு முதன்மைச் செயலாளர், உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600009.
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600009.
அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600009.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600009.
அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600009.
இயக்குநர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600005.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்–ஆளுமை முகமை,
2 மற்றும் 7வது தளம், பி.டி.லி செங்கல்வராய நாயக்கர் மாளிகை,
அண்ணா சாலை, சென்னை –600002.
மாவட்ட ஆட்சித்தலைவர்கள், தூத்துக்குடி, திருநெல்வேலி,
தென்காசி மற்றும் கன்னியாகுமரி.

நகல்

முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600009.
மாண்புமிகு அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச்செயலகம், சென்னை–600009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை
தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின்
தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு3/பே.மே.3) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்